பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 14 (27—6—68) வியாழன் ★ வெளியூர்: ஆனி 15 (28—6—68) வெள்ளி [இதழ்: 11

பத்து ஆண்டுகளில் ரூ. 100 கோடி நட்டம்

கல்கத்தா, ஜூன் 27—

"கடந்த பத்தாண்டுகளில் அசாமில் ஏற்பட்ட வெள்ளத்தினால், ரூ. 100 கோடிக்கும் அதிகமாக நட்டம் ஏற்பட்டிருக்கிறது"

என்று அசாம் முதலமைச்சர் சாலிகா தெரிவித்துள்ளார்.

"ஆண்டுதோறும் வெள்ளத்தினால் ரூ. 10 கோடி நட்டம் ஏற்படுகிறது"

என்றும் அமைச்சர் சாலிகா குறிப்பிட்டிருக்கிறார்.

நாகரிகம் தழைக்க அநாகரிகத்தை எதிர்த்துப் போராடி வருகிறோம்!

'வேற்றுமை' என்பது 'விரோதம்' அல்ல!

கோமாளிக் கூத்தாடுகின்றனர் தமிழகக் காங்கிரசார்!

இராசபாளையம் மாநாட்டின் கேலிக்கை — ம. பொ. சிவஞானம் ஆய்வுரை

சென்னை, ஜூன் 27—

"நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, மொரார்ஜி தேசாய் கரி பூசும் நிலையில் தமிழகக் காங்கிரசுக்காரர்களின் நிலைமை இருக்கிறது!

"மொரார்ஜி தேசாய்க்கு ஆங்கிலத்தில் வரவேற்பு இதழ் படித்துத் தந்தது — காங்கிரசுக்காரர்களின் கோமாளித்தனமாகும்! அதனை, 'தமிழில் மொழிபெயர்க்கக் கூடாது' என்று மொரார்ஜி தேசாய் மறுத்ததோ, போக்கிரித்தனமாகும்!

"தமிழகத்திற்கு வந்த மொரார்ஜி தேசாய் 'தமிழகத்தில் கூட்டணி உடையும்' எனக் கூறியிருக்கிறார்; அவருக்குச் சொல்லிக்கொள்வேன் 'மொரார்ஜி அவர்களே! நீங்கள் இருக்குமிடம் உடையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்; நாங்கள் உடைவதற்கு எந்தவித நிலைமையும் இங்கே இல்லை; எங்களுக்குள் வேற்றுமை இருக்கலாம்; ஆனால் அது, வேற்றுமை' தானே ஒழிய 'விரோதம்' ஆனது அல்ல' என்று!

"நாகரிகம் தழைக்க வேண்டுமென்பதற்காக அநாகரிகத்தை எதிர்த்துப் போராடி வருகிறோம்! இது கொள்கைப் போராட்டம்! எனவே, எதேச்சாதிகார வெறி உணர்வை எதிர்த்துப் போராடி வருகின்ற எங்கள் கூட்டணி உடைவதற்கு வழியேதுமில்லை"

இவ்வாறு, திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள், தமது 63-வது பிறந்த நாளினையொட்டிப் பாலர் அரங்கில் நடை... விழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் விள... மேலும் அவர், இராசபாளையத்தில் நடைபெற்ற ... கிரசுக் குழுவின் கூட்டம் பற்றிக் கருத்தறிவிக்... தாவது :—

"87-ஆண்டுக் கால நீண்ட பாரம்பரியப் புகழ்பெற்ற 'மாபெரும்' கட்சியினர் நடத்திய மாநாடு—'எதிர்க் கட்சி' யானபிறகு நடத்தப்படுகின்ற முதல் மாநாடு-'எப்படி நடைபெறுகிறது' என்பதை உன்...ப்புடனும், கண்ணியத்துட...னும் கவனித்தேன்.

"ஆனால் அந்த மாநாடு, தி. மு. கழகத்தை எதிர்க்கும் 'தி. மு. கழக எதிர்ப்பு மாநாடு' ஆக 'தி. மு. க. ஆட்சிக் கவிழ்ப்பு மாநாடு' ஆகத்தான் அமைந்தது!

அந்தத் துறையிலே அவர்கள் வெற்றி பெற்றார்களா என்றால், அதுதான் இல்லை!"

போர்ப் பயிற்சி பெற சீனா செல்கின்றனராம்

கடுமையாகத் தாக்கப்பட்டும்கூட நாகர்கள் தப்பிவிட்டனராம்

ஏறத்தாழ 200 நாகர்கள், சீனாவில் போர்ப் பயிற்சி பெறுவதற்காகச் சென்றுக் கொண்டிருக்கிறார்களாம்.

அவர்கள், இந்திய எல்லையை விட்டுப் பர்மாவின் எல்லைக்குள் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கலகக்காரர்கள், சீனாவில் கொரில்லாத் தாக்குதல் போன்ற போர்ப் பயிற்சிகளைப் பெறுவார்களாம்.

இவர்கள், கடந்த திங்கள் கிழமை மணிப்பூர் பகுதியில் உள்ள உக்ருல் என்ற இடத்துக்கு அருகில் சென்றபோது, இந்தியப் பாதுகாப்புப் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்; அங்கிருந்து தப்பி அவர்கள் தற்போது சீனாவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார்களாம்.

ஊர்க்காவல் படையினருக்குப் போலீசு ஆணையர் அழைப்பு

சென்னை, ஜூன் 27—

சேரிப் பகுதிகளில் ரோந்து சுற்றுவதற்காக ஏற்கனவே அழைக்கப்பட்டுள்ள 500 ஊர்க்காவல் படையினர் தவிர, மேற்கொண்டு 200 ஊர்க்காவல் படையினருக்குப் போலீசு கமிஷனர் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று முதல் 10 நாட்களுக்கு அவர்கள் போலீசாருடன் சேர்ந்து பணியாற்றுவர்.

தென்காசி வாக்காளர்களே!

விலைவாசி குறைய தி. மு. க.-வுக்கு வாக்களியுங்கள்!

பதினைந்து மாத கால ஆட்சியில் மக்களின் இன்றியமையாப் பொருள்களின் விலைகள் பெரிதும் குறைந்துள்ளன!

விலைவாசியைக் குறைப்பதாகக் கூறிய 1967 தேர்தல் வாக்குறுதியை, 1968-இல் தி. மு. க. நிறைவேற்றியுள்ளது!

விலைவாசி குறைந்த விவரம் பாரீர்! தென்காசித் தேர்தலில் தொகுதி மக்களே ஆதரவு தாரீர்!

பொருள் விவரம்	அளவு	காங்கிரஸ் ஆட்சியில்	கழக ஆட்சியில்
அரிசி	1 படி	ரூ. 2.50 முதல் 3	ரூ. 1.25 முதல் 1.50
துவரம் பருப்பு	1 லிட்டர்	ரூ. 2.30	ரூ. 1.25
உளுத்தம் பருப்பு	1 லிட்டர்	ரூ. 1.85	ரூ. 1.25
கடலைப் பருப்பு	1 லிட்டர்	ரூ. 3.00	ரூ. 1.25
பயத்தம் பருப்பு	1 லிட்டர்	ரூ. 2.25	ரூ. 1.30
கடுகு	1 லிட்டர்	ரூ. 2.25	ரூ. 1.50
புளி	1 கிலோ	ரூ 4.00	ரூ. 1.50
மிளகாய் வற்றல்	1 கிலோ	ரூ. 3 50	ரூ. 1.25
க. எண்ணெய்	1 லிட்டர்	ரூ. 4 25	ரூ. 2-25
ந. எண்ணெய்	1 லிட்டர்	ரூ. 4.50	ரூ. 3.00
தே. எண்ணெய்	1 லிட்டர்	ரூ. 7.00	ரூ. 5.00

...ரின் ஆட்சி உரிமை

...த தலைவர் நேரடிப் பொறுப்பில் ...டுவர உத்தரவு பிறப்பிக்கப்படும்

புதுடில்லி, ஜூன் 27—

...கார் மாநில முதலமைச்சர் போலோ டஸ்வான் சாஸ்திரி பதவி விலகலைத் தொடர்ந்து பீகார் மாநிலத்தில் நிலையான அமைச்சரவை அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தினால், அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

சாஸ்திரியின் பதவி விலகல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியையொட்டி, மாற்று அமைச்சரவை அமைக்க முடியுமா என்று காங்கிரசு சட்டமன்றக் கட்சியின் தலைவர் சின்காவை அழைத்து மாநில ஆளுநர் ஆலோசனை நடத்தினார்.

குறுகிய காலத்தில் தம்மால் மாற்று அமைச்சரவை அமைக்க இயலாது என்று காங்கிரசு சட்டமன்றக் கட்சியின் தலைவர் அறிவித்துவிட்ட காரணத்தினால், அம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுவது உறுதியாகிவிட்டது.

பீகாரில் உள்ள அரசியல் நிலைமைகளை விளக்கி, மாநில ஆளுநர் கனுங்கோ, மத்திய அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறார். இந்த அறிக்கை தலைமையமைச்சர் இந்திரா காந்தி தலைநகர் வந்து சேர்ந்ததும், அமைச்சரவையால் விவாதிக்கப்பட்டு, பீகார் மாநில ஆட்சி உரிமையைக் குடியரசுத் தலைவரின் நேரடிப் பொறுப்பில் கொண்டுவருவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

சம்பாத்... உலகத் தலைவர்களுக்கு!

இரவுக் காவல்காரரின் விந்தைச் செயல்

சண்டிகார் ஜூன் 27—

பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்த 'மோகா' என்னுமிடத்தில் உள்ள திரைப்படக் கொட்டகை ஒன்றின் இரவுக் காவல்காரர் ஒருவர், தாம இதுவரை சம்பாதித்த பணத்தில் 75 சதவிகிதத்தை உலகத் தலைவர்களுக்கு அளித்திருக்கிறார்.

பிரம்மச்சாரியான அவர், உலகத் தலைவர்களான சர்ச்சில், ரூஸ்வெல்ட், நேரு போன்றவர்களுக்கு இப்பணத்தை, பண விடைத் தாள்மூலம் அனுப்பியிருக்கிறார்.

தங்களுடைய தகுதியை உலகத் தலைவர்கள் பாதுகாத்துக் கொள்வதற்காகவே அவர், தாம் சம்பாதித்த பணத்தின் ஒரு பகுதியை அனுப்பியதாகத் தெரிவித்திருக்கிறார்.

மத்திய அரசுக்கு வருமானம் அதிகரிப்பு

1967–68 நிதி ஆண்டில் மத்திய அரசால் தீர்வைகள் விதிக்கப்பட்டு, வரி வசூலிக்கப்பட்ட இனங்கள்மூலம் மொத்தம் ரூ. 2,288.26 கோடி வசூலாயிற்று.

1966—67-ல் இந்த இனங்கள் மூலம் மொத்தம் ரூ. 2,248.39 கோடி வசூலாயிற்று.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 ஆனி 14 (27—6—68) வியாழன்

இராசபாளையம் ‘முழக்கம்’!

“தமிழகத்துக் காங்கிரசைப் பொறுத்தவரையில் அதன் நிலை பரிதாபத்துக்கு உரியது.

“நாடு முழுமையிலும் இங்கு மட்டும்தான், காங்கிரசல்லாத ஒரு தனிக் கட்சி--திட்டவட்டமான பெரும்பான்மையுடன்--ஆளும் கட்சியாக இயங்கி வருகிறது......

• பொதுவாக நன்ருகவே ஆட்சியும் செய்து வருகிறது. காங்கிரசைக் காட்டிலும் சிறந்த முறையில் ஆட்சி நடத்துகிறதா என்பது குறித்துக் கருத்து வேற்றுமை இருக்கலாம்; ஆனால், காங்கிரசைக் காட்டிலும் மோசமாக ஆட்சிபுரியவல்லை என்பதை நேர்மை உள்ளம் படைத்த நடுநிலையாளர் எல்லாம் ஒப்புக்கொள்கின்றனர். மத்திய மட்டத்தில் உள்ள காங்கிரசு ஆட்சித் தலைவர்கள் சிலரே இதை வெளிப்படையாகக் கூறியிருக்கின்றனர்.

“இதுபற்றி இங்குள்ள காங்கிரசுக்காரர்களுக்கு மனத் தாங்கல் உண்டு. இந்த உண்மையும், மத்திய சர்க்காருக்கும் தமிழக சாக்காருக்கும் இப்போது உளள சுமுகமான உறவும், தமிழகக் காங்கிரசுக்காரர்களின் நிலையைப் பரிதாபத்துக்கு உளளாக்கியிருக்கிறது. இராஜபாளையம் நடவடிக்கைகளில் இது முழுக்க முழுக்கப் பிரதிபலிக்கிறது.”

—‘நவமணி’: 25—6—68

தமிழ்நாடு காங்கிரசுக் குழுவின் கூட்டம் இராசபாளையத்தில் நடைபெற்றிருக்கிறது. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அக்குழுக் கூட்டத்தில், கூட்டத் தலைவர் உள்பட அரசியல் சண்டப் பிரசண்டம் செய்தவர் அனைவரும், அதிகாரத்தை இழந்துவிட்டதால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற வயிற்றெரிச்சலை வெளிக்குக் காட்டிக்கொள்ளும் முறையிலேயே பேசியுள்ளனர்.

தமிழ்நாடு காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், கேரளக் காங்கிரசுக் குழுத் தலைவர், மைசூர் காங்கிரசுக் குழுத் தலைவர் ஆகியோர், பதவி இழந்து கிடப்பதால் மனமுடைந்து கிடக்கின்ற தமிழகக் காங்கிரசுக்காரர்களுக்கு ஆறுதலும் கூறியிருக்கின்றனர்கள் -- தெம்பும் ஊட்டி இருக்கின்றனர்கள். ஆனால், அவர்கள் கூறிய ஆறுதல் மொழிகளால், தமிழகக் காங்கிரசுக் கட்சியினர் ஆறுதல் பெற்றிருப்பார்களா என்பது சந்தேகமே!

அக்குழுக் கூட்டத்தில், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் என்ற ‘மாபெரும் காங்கிரசுத் தியாகி’யும் கலந்துகொண்டிருக்கின்றனர். பெண்கள் பாதுகாப்பைப் பற்றியேதான், அவருடைய சிந்தனை எப்பொழுதும் வட்டமிட்டுக்கொண்டிருக்கும்.

முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டால், ‘பெண்கள் நடு வீதியில் பாதுகாப்பாகச் செல்ல முடியாது’ என—சென்ற பொதுத் தேர்தல் நேரத்தில்—கிருஷ்ணமாச்சாரியார் கூறியிருந்தார். அந்தத் ‘தீர்க்கதரிசனம்’ இப்பொழுது உண்மையாகிவிட்டிருக்கிறது என அவர், காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கூறி குளறியுள்ளார்.

இந்த வடிகட்டின அவதூறுக்கு, கிருஷ்ணமாச்சாரியார், ஒரு சான்றையாவது காட்டினரா?—அதுதான் இல்லை. ஏதாவது அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருந்தால் அல்லவா, சான்று அவர் சுட்டிக் காட்டுவதற்கு? திட்டவட்டமாகக் கூறுவதற்கு எதுவும் இல்லாததால், பொதுப்படையாக, ‘அனைவரின் பாதுகாப்புக்கும் ஆபத்து’ என ஒப்பாரி வைத்திருக்கின்றனர்—அந்த அரசியல் காணயஸ்தர்!

‘காங்கிரசுப் பெரியவர்’ எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுவருகின்ற காமராசர் அவர்களின் மேடைப் ‘பேச்சு’ம், அந்தப் பேச்சின் ‘தரமும்’, அப்பேச்சில் பொதிந்து கிடக்கின்ற ‘விழுமிய பொருளு’ம், தமிழ் மக்கள் தெரிந்துள்ளவையாகும். வழக்கப்படி அந்தப் பெரியவரும், ‘அரசியல் வாந்தி’ எடுத்திருக்கிருர்.

‘பத்து இலட்சம்’ என்ற சிறப்புப் பெயரால் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அழைக்கப்பட்டுவருகின்ற ‘இரக்கமென்ற பொருளிலா அரக்கர்’ வழிவந்த முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்களும், அக்குழுக் கூட்டத்தில், கழக ஆட்சியின் மீது வசை பாடி இருக்கின்றனர். தம்மைப்பற்றி இதுவரையில் கூறப்பட்டுவந்திருக்கின்ற அதே குற்றச்சாட்டுக்களை, கழக அமைச்சர்கள்மீதும் பக்தவத்சலனார் வீசியுள்ளார்.

அதாவது, புதிய தொழில்களைத் துவங்குவதிலும், பேருந்துகளை விடுவதற்கு அனுமதி தரப்படுவதிலும் இலஞ்ச ஊழல் நடைபெற்றிருப்பதாக – தாம் முதலமைச்சராக இருந்த காலத்தில் அவ்வூழல் பற்றிக் கனவிலும் தீண்டி அறியாத உத்தமரான பக்தவத்சலனார் – முணுமுணுத்துள்ளார்.

தம்மீது படிந்திருக்கின்ற ‘கறை’யைக் கழுவிக்கொள்ள விரும்பாத பக்தவத்சலமா, கழக அமைச்சர்கள்மீது, இல்லாத களங்கத்தைக் கற்பிப்பது? தமிழகம் ஏற்றுக்கொள்ளாது--‘பத்து இலட்ச’த்தின் இந்த அடிப்படையில்லாத குற்றச்சாட்டை!

நடிகர் ஒருவர்கூட அந்த அரசியல் மேடையில், அரசியல் ‘டைலாக்’ பேசியிருக்கின்றனர்! அத்தனையும் கற்பனை—அபத்தக் களஞ்சியம்!

‘ஆகஸ்டு மாதத்தில்—காங்கிரசுக் கட்சிக்குள்ளாக, ‘இளைஞர் காங்கிரசு’ என்ற ஒரு அமைப்பு இருக்கிறதாம்—அந்த அமைப்பு, படி அரிசிப் போராட்டத்தைத் துவங்கப்போகிறதாம்! அதற்குக் காங்கிரசுக் குழு, மனமுவந்து ‘ஆசீர்வாதம்’ செய்திருக்கிறது!

கழக அமைச்சர்களுக்கு எதிராகச் சில பல இடங்களில் காங்கிரசு உதிரிகள் காட்டிவந்த கறுப்புக் கொடி நாடகத்துக்கும் தனது ஒப்புதலைக் காங்கிரசுக் குழு தந்திருக்கிறது. கறுப்புக் கொடியின் ‘முகமூடி’ அகற்றப்பட்டிருக்கிறது இப்பொழுது!

உணவுத் துறையில் கழக ஆட்சியின் சாதனை!

தென்காசி வாக்காளர்களே--சிந்தித்துப் பாரீர்!

1. சென்னை, கோவை, மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப்படுகிறது; இதனால் 43 இலட்சம் மக்கள் பயனடைகிருர்கள்!
2. குடும்பக் கார்டு நடைமுறையில் உள்ள நகரங்களில் படி அரிசி ரூ. 1.20-க்கு வழங்கப்படுகிறது; இதனால், சுமார் ஒரு கோடி மக்கள் பயனடைகிருர்கள்!
3. அரிசிப் பங்கீட்டு அளவு 7 அவுன்சிலிருந்து 8 அவுன்சாக அதிகரிக்கப்பட்டது!
4. தமிழகத்திலுள்ள எல்லா மாணவர் விடுதிகளுக்கும், மருத்துவ நிலையங்களுக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படுகிறது!
5. திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் மாலை 3-மணிக்குமேல் திறக்க அனுமதிக்கப்படாத உணவு விடுதிகள், கழக ஆட்சியில் திறக்க அனுமதிக்கப்பட்டன!
6. இருபோக சாகுபடியின் மூலம் கடந்த ஆண்டு 7.50 இலட்சம் டன் அதிகம் உணவு உற்பத்தி செய்யப்பட்டது!
7. தரமான அரிசி தயாரிக்க 14 பெரிய கூட்டுறவு அரிசி ஆலைகள் நிறுவப்படுகின்றன!
8. அரிசிக்காக அரிசிக் கடைகளில் காத்திருந்த நீண்ட மக்கள் வரிசை, இறந்த காலக் காட்சியாக மாறிவிட்டது!
9. உணவுப் பங்கீட்டுக் கடைகளில், ‘இருப்பு இல்லை’ என்ற நிலை தற்போது இல்லை!
10. கிராமங்களிலும் உணவுப் பற்றுக் குறை நீங்கி எளிதில் உணவுப் பொருட்கள் மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கின்றன!

—தொகுத்தவர்: மூ. இளங்கோ

நீலகிரி இரயில் பாதை பிழைக்குமா?

இழப்பில் ஒரு பகுதியை மாநில அரசு ஏற்க வேண்டுமாம்

இழப்பு ஏற்படும் சமவெளிப் பாதைகள் எடுபடுவது உறுதியாகிறது

புதுடில்லி, ஜூன் 26 — இயற்கை எழில் வாய்ந்த மலைவாச இடங்களை இணைக்கும் இரயில் பாதைகள் கட்டுபடியாகவில்லை என்பது உண்மையே; எனினும், இந்தப் பாதை களை அகற்ற ‘வேண்டியதில்லை’ என்று தீர்மானிக்கப்படலாம்.

தமிழகத்தில் நீலகிரி இரயில் பாதை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாதைகளின் பொருளாதாரத்தைப் பற்றி விவாதிப்பதற்காக இரயில்வே அமைச்சர் பூஞ்சா, அடுத்த மாதம் முதலமைச்சர்களைச் சந்திக்க எண்ணியுள்ளார்.

மலைவாச இடங்களை இணைக்கும் இரயில் பாதைகள் மூலமாக ஏற்படக்கூடிய நட்டத்தின் ஒரு பகுதியை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பின் அந்தப் பாதைகள் வைத்துக் கொள்ளப்படும்.

அந்தப் பாதைகள் மூலமாக ஆள் நடமாட்டம் இல்லாத காடுகள் திருத்தப்படுவதாலும், மலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பயன்படுவதாலும், மாநில அரசுகள், நட்டத்தின் ஒரு பகுதியை ஈடு செய்யலாம்.

சமவெளியில் உள்ள கட்டுபடியாகாத இரயில் பாதைகளைப்பற்றியும் முதலமைச்சர்கள் விவாதிப்பார்கள். தற்போது சமவெளியில் கட்டுப்படியாகாமல் இருக்கும் இரயில் பாதைகள் உள்ள இடங்களில் பஸ் போக்குவரத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நிதி உதவி அளிப்பது பற்றி இரயில்வே அமைச்சகம் உத்தேசித்துள்ளது.

நாடு முழுவதிலும் கட்டுபடியாகாத பாதைகளுக்காகச் சுமார் ரூ 6 கோடி நட்டம் ஏற்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

‘காங்கிரசு மாநாடு’ என்ற தலைப்பிட்டு, ‘நவமணி’ இதழ் எழுதியுள்ளதை இங்கு அப்படியே தருகிறோம்:—

‘இராசபாளையத்தில் நடந்த தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டிக் கூட்ட நடவடிக்கைகளில், வழக்கத்திற்கு அதிகமான வேகம் தென்படுகிறது. மாறிவிட்ட இன்றைய அரசியல் சூழ்நிலையில், இது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே. இருந்தாலும், இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆளும் கட்சியாக இருந்த ஒரு கட்சி இன்னும் மத்திய மட்டத்தில் ஆட்சிப் பொறுப்பு வகிக்கும் அந்தக் கட்சி சற்று நிதானத்துடனும், பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ளலாம்.

“இங்கு, காங்கிரசு ஆளும் கட் [illegible] இருந்த காலத்தில், எதிர்க் கட்சிகளுக்கு எல்லாம், [illegible] ட்சியாக இயங்குவது எனத் [illegible] இன்று எதிர்க் கட்சியாக [illegible] எதிர்க் கட்சியாக செயல் [illegible] ல், அந்த வாய்ப்பைக் [illegible]

“‘எந்தக் கட்சி எ [illegible] மாதிரியாகத் தான் இருக்கு [illegible] ல்ல’ எனக் காங்கிரசு நிரூபித்துவ [illegible]

“எப்படியும் தி. மு. கழக சாக்காரை குறை கூற வேண்டும் என்பதற்காகவும், மட்டம் தட்டவேண்டும் என்பதற்காகவும், ஒன்றுக்கொன்று மாறுபட்ட முரணான கருத்துக்களை காங்கிரசு தெரிவிக்கிறது.

“ஒரு பக்கம், ‘படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்’ எனக் கிளர்ச்சி செய்வதும், இன்னொருபுறம், கொள்முதல் விலையை அதிகரிக்கக் கோருவதும் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

“ஆளும் கட்சியை இடித்துரைக்கும் உரிமை எல்லோருக்கும் உண்டு. நிச்சயமாக பிரதான எதிர்க் கட்சியான காங்கிரசுக்கு இந்த உரிமை இருக்கிறது. ஆனால், அதைப் பயன்படுத்துவதில், பொறுப்பை உணர்ந்து செயல்படவேண்டும். அப்படி இல்லை என்றால், சுட்டிக்காட்டப்படுவது குறை என்று கருதப்படாமல், ‘குற்றம் கூறவேண்டும் என்பதற்காகக் கையாளப்படும் பிரசார தந்திரம்’ என்றே மக்கள் கருதுவர்!”

—கா. க

தில்லை வில்லா[illegible]

உடல் நிலை

சிதம்பரம், ஜூன் 2[illegible] நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் தில்லை வில்லாளன், சென்ற பத்து நாட்களாகக் கடுமையான இருமல் வயிற்றுவலியால் படுத்த படுக்கையாக இருக்கிருர். சென்னை டாக்டர் திரு. அண்ணாமலை அவர்களால் பரிசோதிக்கப்பட்டு, சிதம்பரம் டாக்டர்கள் கே. ரங்கசாமி, சி. வி. ரங்கசாமி ஆகியோரால் கவனிக்கப்பட்டு வருகிருர். குணமாக இன்னும் சில நாட்களாகும் எனத் தெரிகிறது.

கோவைக்குக் குடிநீர்த் திட்டம்---
கேரள மதிப்பீட்டுக் குழு யோசனை

தண்ணீருக்கு பதில் அரிசி

தமிழக அரசுன் கோரிக்கைக்கு கேரளம் விதிக்கும் நிபந்தனை

திருவனந்தபுரம், சூன் 26—

'தமிழ்நாடு. பதிலுக்கு அரிசி தரவேண்டும்' என்ற நிபந்தனையின்பேரில் கோவைக்குக் கூடுதலாக 36 கோடி கன அடி குடிநீர் தரலாம் என கேரள சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு யோசனை கூறியிருக்கிறது.

"கூடுதலாக 130 கோடி கன அடி தண்ணீர் வேண்டுமென்று தமிழகம் கேட்டிருப்பது மிகையாகும்'' என்றும் இந்தக் குழு கூறியிருக்கிறது.

தற்போது சிறுவாணி நதியிலிருந்து தமிழக அரசு 29 கோடி கன அடி தண்ணீர் எடுத்துவருகிறது. கோவையின் குடிதண்ணீர்த் தேவை அதிகரித்திருப்பதால், 130 கோடி கன அடி தண்ணீர் வேண்டுமென்பது தமிழகத்தின் கோரிக்கை.

பத்தாண்டுக் காலத்துக்குள் கோவையின் மக்கள் தொகை 10 இலட்சமாகிவிடுமென்றும், தலைக்கு தினசரி 25 காலன் வீதம் தேவைப்படும் என்றும் தமிழக அரசு மதிப்பிட்டுள்ளது. இதற்காகப் புதிய அணை கட்டி இந்தக் கூடுதல் தண்ணீரைப் பெற வேண்டும் எனக் கூறியிருக்கிறது.

இந்தப் புதிய அணைக் கட்டுவது பற்றி கேரள சட்டமன்ற மதிப்பீட்டுக்குழு கூறுவதாவது:—

"இந்த அணை கேரள மாநிலத்தில் கட்டப்படவிருப்பதால், கேரளத்திலுள்ள அட்டப்பாடி பகுதியின் பாசனத் தேவைக்கும், குடிநீர் தேவைக்கும் வேண்டிய தண்ணீரை முன்கூட்டியே மதிப்பிட்டுவிட வேண்டும்.

உபரி தண்ணீரிலிருந்து தமிழகத்துக்கு 65 கோடி கன அடி தண்ணீர் விடலாம்.

அட்டப்பாடி பகுதியின் தற்போதைய மக்கள் தொகை 21000, அடுத்த பத்தாண்டுகளில், இது, ஒரு இலட்சமாக அதிகரிக்கும். குடிதண்ணீருக்கு 113 கோடி கன அடி தண்ணீர் தேவைப்படும்.

இந்த நிபந்தனையின் பேரில் அணை நிர்மாணத்தில் பங்குகொள்ள தமிழக அரசினரை அனுமதிக்கலாம். கட்டுவதற்கான செலவுக்குப் பணத்தை, தமிழக அரசு, கேரள அரசினரிடம் தர வேண்டும்

பெரியாறு பரம்பிக்குளம் அணைகள் பற்றிக் கோரிக்கை

பெரியாறு, பரம்பிக்குளம் அணைகள் இப்போது தமிழக அரசின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. இதை, கேரள அரசுக்கு மாற்றித் தரவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

கேரளப் பகுதியில் வேறொரு மாநில அரசு அணை கட்டுவதை அனுமதிப்பது தவறான கொள்கையாகும்; இம்மாதிரி அணைகள் கட்டப்படும்போதெல்லாம், கேரள அரசுதான் இவற்றைக் கட்டவேண்டும்.

பிற மாநிலங்கள் கொடுக்கும் பணத்திலிருந்து கட்டப்படும் அணைகளின நிர்வாகக் கட்டுப்பாட்டை கேரள அரசுதான் வைத்துக்கொள்ள வேண்டும்.

செந்தமிழ்க் கல்லூரி

சென்னைத் தமிழ் வளர்ச்சி மன்றச் சார்பில் நடைபெறும் செந்தமிழ்க் கல்லூரி, இவ்வாண்டு 27—6—68 அன்று மாலை 6 மணிக்குத் திறக்கப்பெறும். முதல் வகுப்பினை மகாவித்துவான் மே. வி. அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

கல்லூரியில் சேர விரும்புபவர், செயலாளர், தமிழ் வளர்ச்சி மன்றம், 54, வரதாமுத்தியப்பன் தெரு சென்னை-1' என்னும் முகவரியோடு தொடர்பு கொள்க.

கல்லூரி நடைபெறுமிடம் :— நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, ஏழுகிணற்றுத் தெரு, சென்னை-1.

பவானி தி. மு. க. மறுதேர்தல்

தலைமைக் கழக ஆணையாளர் ஈ. ஆர். கிருஷ்ணன்

கோவை மாவட்டம் பவானி தி. மு. க. கிளையில் நடைபெற்ற தேர்தல் குறித்து எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபனை -- மற்றும் பிரச்சினைகளைத் தலைமைக் கழகம் பரிசீலனை செய்து, அங்கு மறு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பவானி தி. மு. க. கிளையின் தேர்தல்களை 6—7—68 சனிக்கிழமை காலை 9-மணிக்கு சேலம் மாவட்டச் செயலாளர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவர்கள், தலைமைக் கழகச் சார்பான ஆணையாளராக இருந்து நடத்துவார்.

தலைமைக் கழகம் (தி.மு.க.)

மத்திய அரசுப் பள்ளிகளில் இந்தியைத் திணிக்கும் முயற்சி

கடுமையான எதிர்ப்புக்குப்பின் . திரும்பப் பெறப்படுகிறது

கல்வி அமைச்சகத்தின் சுற்றறிக்கை திருத்தியமைக்கப்படுமாம்

புதுடில்லி, சூன் 26—

மத்திய அரசுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப்படுத்தும் சர்ச்சைக்குரிய மத்திய கல்வித் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கை மும்மொழித் திட்டத்தை வலியுறுத்துகின்ற வகையில் திருத்தி எழுதப்படும் என்று தெரிகிறது.

மத்திய அரசு மேற்பார்வையில் இயங்குகின்ற 118 பள்ளிகளிலும் ஆங்கிலத்தை அகற்றி, 'சமூக இயல் பாடங்கள் அனைத்தும் இந்தி மொழியிலேயே பயிற்றுவிக்கவேண்டும்' என்று மத்திய கல்வித் துறைத் துணை அமைச்சரின் ஆணைக்கிணங்க அண்மையில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

இச்சுற்றறிக்கை, மத்திய கல்வி அமைச்சரின் ஒப்புதலைப் பெறுமலும், ஆட்சிமொழிச் சட்டத்தை ஒட்டிய மும்மொழித் திட்ட கொள்கையை மீறுகின்ற வகையிலும் அமைந்திருந்தது.

இந்தி மொழியை ஒரே ஆட்சி மொழியாக இந்தி பேசாத மாநில மக்கள் ஏற்கும்வரையில், 'ஆங்கிலம் இந்தியோடு தொடர்ந்து நீடிக்கவேண்டும்' என்று ஆட்சிமொழிச் சட்டம் வலியுறுத்துகிறது.

ஆகையினால், எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கின்றவகையில், 'ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளும் பயிற்சி மொழியாக இருக்கலாம்' என்று ஆட்சிமொழிச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், 1962-ம் ஆண்டில் மத்திய அரசு மேற்பார்வையில், இயங்குகின்ற பள்ளிகளில், 'ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளும் பயிற்சி மொழியாக இருக்கலாம்' என்று மத்திய அமைச்சரவை முடிவு எடுத்திருக்கிறது.

இப்பள்ளிகளில் மேற்குறிப்பிட்ட இரண்டு மொழிகளுள் ஏதேனும் ஒரு மொழியில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுமானால், 'இன்னொரு மொழியையும் பயிற்சி மொழியாக ஆக்க வேண்டும்' என்றும் அமைச்சரவை 1962-ல் முடிவு செய்திருக்கிறது.

இதன்மூலம், இரு மொழித் திட்டத்தை மத்திய அமைச்சரவை வலியுறுத்தியிருக்கிறது.

ஆனால், அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், 'மத்திய அரசுப் பள்ளிகளில், இந்தியில் மட்டுமே பாடங்கள் கற்பிக்கப்படும்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது, இந்தி பேசாத மாநில மக்களுக்கு அச்சத்தை உண்டாக்கியிருக்கிறது!

இந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் இந்தச் சுற்றறிக்கை மறுபரிசீலனை செய்யப்பட்டு, புதிதாக ஓர் ஆணை பிறப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

வருந்துகிறோம்

சென்னை 92-வது வட்டம் நன்னெறி மன்றச் செயலாளர் இரா. அருணன் அவர்களின் துணைவியார் 22—6—68-ல் இயற்கையெய்தினார்; மறுநாள் சவ அடக்கம் நடைபெற்றது. தி. மு. கழக கிளை நிர்வாகிகளும், ஏராளமான கழகத் தோழர்களும் கலந்துகொண்டு தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

மும்மொழித் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்பு

மொரார்ஜி பேசத் துவங்கியதும் கூட்டத்தில் சலசலப்பு

ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாதவன்--செழியன் ஏற்ற பங்கு

புதுடில்லி, சூன் 26—

அண்மையில் ஸ்ரீநகரில் கூடிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றியும் விவாதிக்கப் பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய ...லமையமைச்சர் இந்திரா காந்தி, 'கடந்த தேசிய ஒரு... ...க் கூட்டத்தில் ஏற்பட்ட முடிவின்படி மும்மொ... ...வேண்டும்' என்று குறிப்பிட்டார். ... ...ற தி. மு. க உறுப்பினர் இ... ...மொழித் திட்டம் (அதாவது, ... செயல்படுத்தப் படுவதைச் ... எதிர்த்தார்—

"மு... ...த் திட்டமாகச் ... ...வரை, எந்த ஒரு மாநிலமும் மும்மொழித் திட்டத்தை செயல்படுத்தவில்லை''

என்று, திரு. செழியன் குறிப்பிட்டார்; 'இக்கூட்டத்தில் மும்மொழித் திட்டம் பற்றி விவாதிக்கப்படுமானால், இத்திட்டம் பற்றி விரிவான விவாதம் நடைபெற வேண்டும்' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மும்மொழித் திட்டத்தை வற்புறுத்தி இந்தி மொழி பேசும் மாநில மக்கள், வேறொரு தென்னிந்திய மொழியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்ற பிரச்சினை இக்கூட்டத்தில் எழுப்பப் பட்டபோது,

"தேவையில்லாத வகையில் இன்னொரு மாநில மொழியை இந்தி பேசும் மாநில மக்கள் பயில வேண்டும் என்ற பயனற்ற கொள்கையை ஏன் வற்புறுத்த வேண்டும்?''

என்று, திரு. இரா. செழியன் கேட்டார்.

"ஆங்கிலம், இந்தி இவைகளோடு இன்னொரு மாநில மொழியை எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் பயிற்சி மொழியாக வைக்கவேண்டும்''

என்று இந்தியத் துணைத்தலைமையமைச்சர் மொராஜி தேசாய் கூறியபோது, கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. உடனே இந்தப் பிரச்சினை நிறுத்தப்பட்டது.

இதன் விளைவாக, மும்மொழித் திட்டம் பற்றிய விவாதமே ஒருமைப்பாட்டுக் குழுக்கூட்டத்தில் கைவிடப்பட்டு விட்டது.

இக்கூட்டத்தில் பாடப் புத்தகங்கள் பற்றியும் பிரச்சினை எழுப்பப்பட்டது; 'தேசிய அளவில் பாடப் புத்தகங்களை வைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்' என்று சொல்லப்பட்டபோது, தமிழக சட்ட அமைச்சர் திரு. மாதவனும், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியனும்,

'மாநில உரிமையைப் பறிக்கின்ற செயல் இது'

என்று வன்மையாகக் கண்டித்தனர்—

"ஒவ்வொரு மாநிலமும் பாடப்புத்தகக்குழு ஒன்றை வைத்திருக்கும்போது மத்திய அரசு இப்பிரச்சினையில் எப்படித் தலையிட முடியும்''

என்று கேட்டனர்.

நீண்ட விவாதத்திற்குப்பின் 'மாநில அரசினைக் கலந்தாலோசித்து இணைப்புக் குழு ஒன்று அமைக்கலாம்' என்ற கருத்துக்கு மத்திய அரசு வந்திருப்பதாகத் தெரிகிறது.

இத்தகவலை, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிய திரு. இரா. செழியன் அவர்கள் டெல்லியில், பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

திண்டிவனம், பண்ருட்டி நகர தி. மு. க. தேர்தல்

தலைமைக் கழக ஆணையாளர் கே. எம். கண்ணபிரான்

திண்டிவனம், பண்ருட்டி ஆகிய நகர தி. மு. க. கிளைகளின் தேர்தல்கள் முறையே 6—7—68, 7—7—68-ம் நாட்களில் காலை 9-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் (பொதுக் குழு ...ப்பினர்) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திண்டிவனம், பண்ருட்டி நகரக் கிளைகளின் நிர்வாகிகள், தேர்தல் நடைபெறும் இடம் --- மற்ற விவரங்களை அந்தந்த நகரக் கிளையின் உறுப்பினர் அனைவருக்கும் முறைப்படி முன்கூட்டியே அறிவித்து, தேர்தல்கள் சிறப்புற நடைபெறும் வகையில் ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

— தலைமைக் கழகம் (தி.மு.க.)

தமிழக மின் குழு
செங்கற்பட்டு மின்பெருவட்டம்

விற்பனை அறிக்கை

54275 லிட்டர் கொள்ளளவுள்ள 30 அடி நீளம் 9 அடி விட்டமுள்ள இரு எண்ணெய்த் தொட்டிகள், காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டை 110 K. V. மின் நிலையத்தில் "அவை உள்ள நிலையிலேயே" விற்கப்பட இருக்கின்றன.

மேற்கூறிய இரண்டு எண்ணெய்த் தொட்டிகளை (டாங்குகளை) வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட விலை ஒப்பங்கள் 12—7—68 தேதி 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். எல்லா விலை ஒப்பங்களும் ரூ. 200 (ரூபாய் இரண்டு நூறு மட்டும்) பிணைத் தொகை (E. M. D.) செலுத்தியதற்கான ரசீதுடன் அனுப்பப்படுதல் வேண்டும். பிணைத் தொகையை (E,M D) இவ்வலுவலகத்தில் நேரில் செலுத்தலாம். அல்லது மணியார்டர் அல்லது Demand Draft மூலம் தலைமைக் கணக்கர் செலவுப் பிரிவு, செங்கற்பட்டு மின் பெருவட்டம், இரயில்வே சாலை, காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி ரசீது பெற்றுக் கொள்ளலாம். பிணைத் தொகை செலுத்தப்படாத விலை ஒப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வாங்குவதற்கு விருப்பமுள்ளவர்கள் எண்ணெய்த் தொட்டிகளை காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டை 110 K. V. மின் நிலையத்தில் அலுவலக நேரத்தில் சென்று அவைகளுடைய நிலையை அறிந்துகொள்ளலாம். இந்தத் தொட்டிகளைப் பற்றிய வேறு எந்தக் குறிப்புகளும், இவ்வலுவலகத்திலிருந்து கொடுக்கப்படமாட்டாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட விலை ஒப்பந்ததாரர், எண்ணெய்த் தொட்டிகளின் இரயத்தையும் இவ்வலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்ட பதினைந்து (15) நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். அப்படி மொத்தத் தொகையைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் பிணைப் புத் தொகையை (E. M. D.) இழக்க நேரிடும்.

சூப்பரின்டென்டிங் இஞ்சினியர்,
செங்கற்பட்டு மின் பெருவட்டம்,
காஞ்சிபுரம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

29-6-68

தர்மபுரி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை மணிக்கு சத்திரத் தெருவில்; தலைவர்: சு. தியாகராசன்; பேசுவோர்: எஸ். கஸ்தூரி, எம். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., த். வே. வடிவேலன், டி. பி. இராசாமணி.

ஆத்தூர்

எம். ஜி. ஆர். மன்ற 8-வது ஆண்டுவிழா; மாலை 6-30 மணிக்கு; தலைவர்: என். சீனிவாசன்; பேசுவோர்: க. அன்பரசு, சிற்றுளி சுப்பிரமணியம், கே. என். சிவபெருமாள் எம்.எல்.ஏ., டி. கே. மாதவன், எஸ். இராமசாமி, வி. எஸ். அம்பாயிரம், ப. அ. ஆறுமுகம், ஆர். கன்னையன், ஜி. என். பெரியசாமி, கே. வி. இராமநாதன், எஸ். கே. இராசு.

தஞ்சை

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு குதிரைகட்டித் தெருவில்; தலைவர்: ப. தங்கவேலர்; பேசுவோர்: ப. உ. சண்முகம் எம்.எல்.சி., பி. மாணிக்கவாசகம், துறவி, கு. சுல்தான், டி. கே. கோவிந்தன், ஒய். சேவியர்.

30-6-68

திண்டுக்கல்

6-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு பழனி ரோடு காந்தி நகரில்; தலைவர்: ப. நாராயணன்; பேசுவோர்: பரமத்தி சண்முகம், காதர்சா, சு. பாலமுருகேசன், க. அங்குசாமி எம்.சி., என். முத்து, எஸ். ஏ. இராசன், என். கோபால்.

நாகநதி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: டி. சாமிநாதன்; பேசுவோர்: கோ. விசுவநாதன் எம்.பி., என். வீராசாமி எம்-எல்.ஏ., ஆர். என். அரங்கநாதன் எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம், தெ. சமரசம், வி. எஸ். பாண்டியன், இரா. சீனிவாசன், இரா. குப்புசாமி, அறிவழகன்.

கட்டிமேடு

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: மு. அப்துல் ரகீம்; பேசுவோர்: என். எஸ். இளங்கோ, ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., வை. சுப்பிரமணியம், இரா. நடராசன், இரா. சங்கரன், மு. க. இரசாக், டி. எஸ். கல்யாணசுந்தரம். (மணிவண்ணன்—பத்மினி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

வெள்ளித் திருப்பூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு புதிய பேருந்து நிலையத்தில்; தலைவர்: எம். பி. சீரங்கன்; கொடியேற்றுவோர்: ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ.; பேசுவோர்: எம். ஆர். இராமலிங்கம், இரா. பெரியசாமி, தி. செ. சுப்பிரமணியம், மற்றும் பலர். (மதுரை கண்ணம்மா—தங்கராசு கலை நிகழ்ச்சி நடைபெறும்).

புதுவிராலிப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு எம். ஜி. ஆர். திடலில்; தலைவர்: மு. பெத்து; பேசுவோர்: ஆ. துரைராசு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் து. ப. அழகமுத்து, இரா. நாராயணன், ஜே. எஸ். இராசு, மு. க. து. நடராசன், முத்துச்செல்வன், மற்றும் அரு. ஆதிமூலம், க. மருதமுத்து.

நெய்வேலி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு கலைஞர் திடலில்;

வேளாண்மை--நீர்ப்பாசனத் துறைகளில் தி. மு. க. அரசு காட்டிடும் அக்கறை!

15 மாத காலத்தில் புரிந்துள்ள சாதனை-- தென்காசி வாக்காளர்களே சிந்தித்துப் பாரீர்!

தி. மு. கழக அரசு பொறுப்பேற்றதும் உணவுப் பற்றுக் குறையைப் போக்கி விளைச்சலைப் பெருக்கப் பல புதிய திட்டங்களை உருவாக்கியது:—

1. மாவட்டந்தோறும் வேளாண்மைக் கருத்தரங்குகளை நடத்தி உழவுத் துறையினரின் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டன.
2. கடந்த ஆண்டு சுமார் 6-இலட்சம் ஏக்கர் ஒருபோக நிலத்தை இருபோகச் சாகுபடி நிலமாக மாற்றி உணவு உற்பத்தியைப் பெருக்கியது. இதனுல், விவசாயிகளின் வருமானமும் அதிகரித்தது.
3. இரண்டாம் போகத்திற்குத் தண்ணீர்த் தீர்வை நீக்கப்பட்டது.
4. விவசாயிகளுக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவைகளைக் காலத்தே கொடுத்து உதவியது.
5. பூச்சி மருந்துகளுக்கு இதுவரை கொடுத்துவந்த 25 சதவீதச் சலுகை 35 சதவீதமாக உயர்த்தப்பட்டது.
6. ஒரு கோடியே நாற்பது இலட்சம் ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு நிலவரி நீக்கப்பட்டது.
7. ஓர் ஏக்கருக்குக் குறைவாக உள்ளோருக்கு நெல் கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது; இதனுல், 13 இலட்சம் விவசாயிகள் பயனடைகின்றனர்.
8. முன்பு போலல்லாமல் தற்பொழுது விவசாயிகளுக்குக் களத்திலேயே நெல் கொள்முதலுக்குப் பணம் தரப்படுகின்றது.
9. நிலமற்ற ஏழை விவசாயிகள் 17,500 பேர்களுக்குக் கடந்த ஆண்டு 30,000 ஏக்கர் நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 50,000 ஏக்கர் பட்டா செய்து கொடுக்கப்பட்டு வருகிறது.
10. விவசாயிகள் கடனுக்கு விண்ணப்பிக்கும்போது கணக்குப் பிள்ளையிடமிருந்து நிலத்தின் 'சர்வே' எண்ணைப் பெறுவது கடினமாக இருந்துவந்தது; இதை மாற்றி, கிராம நல ஊழியர்களே, 'அடங்கல்' பதிவேட்டிலிருந்து 'சர்வே' எண்ணைப் பார்த்துக்கொள்வதற்கு வழி செய்யப்பட்டது.
11. விவசாயிகளுக்குச் சிரமமின்றி உரம் கிடைக்கக் கார்டு முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.
12. முன்பு பெரிய நிலப் பிரபுக்களுக்கே டிராக்டர்கள் கடனுகக் கொடுக்கப்பட்டுவந்தன. தற்பொழுது 5 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 10 ஏக்கர் புன்செய் நிலம் உள்ள—ரூ. 37,000 சொத்து மதிப்புக் கொடுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கு டிராக்டர்கள் கொடுக்கப்படுகின்றன.
13. இவ்விதம் எளிதான முறையில் 220 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.
14. மேலும், சாதாரண விவசாயிகளும் பயனடைய ஒவ்வொரு ஒன்றியமும் ஒரு டிராக்டர், நான்கு 'பவர் ஸ்ப்ரையர்'கள் வாங்கிக் குறைந்த வாடகைக்குக் கொடுக்க வகைசெய்யப்பட்டுள்ளது.
15. விவசாயிகளுக்குக் கூட்டுறவு பாங்கி கொடுத்துவந்த கடன் தொகையின் அளவு ரூ. 9,000-லிருந்து ரூ. 15,000 ஆக மாற்றப்பட்டுள்ளது.
16. முன்பு வேளாண்மைத் துறைக்கு ரூ. 36 68 கோடிதான் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
17. விவசாயிகள் கடன் பெறுவதற்கான முறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.
18. தனியார் பாங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் தருவதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.
19. விவசாயிகளின் தண்ணீர்த் தீர்வையையும், மின்சாரக் கட்டணத்தையும் உயர்த்துமாறு மத்திய அரசு கூறியதை தமிழக அரசு ஏற்க மறுத்துவிட்டது.
20. தற்போது ஊராட்சி ஒன்றிய விவசாய அதிகாரிகள் அரைக் கால்சட்டை அணிந்து வயலில் இறங்கி வேலை செய்து, விவசாயிகளை ஊக்குவிக்கும் காட்சியை நாம் எங்கும் காண்கிறோம்.
21. கடந்த ஆண்டு 43,000 பம்பு செட்டுகளுக்கு மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது. இது, இதற்கு முந்திய ஆண்டை விட 6,000 அதிகமாகும்.
22. சிறு பாசனத் திட்டத்திற்கு 1966—67-இல் ரூ. 11 கோடி தான் செலவு செய்யப்பட்டது. 1967—68-ல் ரூ. 13 கோடி செலவு செய்யப்பட்டது.
23. கோமுகி ஆற்றுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது; இதனுல், 5,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறும்.
24. திருநெல்வேலி மாவட்டத்தில் இராம நதி, கடனு ஆற்றுத் திட்ட வேலைகள் நடைபெறுகின்றன.
25. வைகை ஆற்றுக் கால்வாய்களை மேநிலைப்படுத்தும் திட்டம், ரூ 4 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
26. கீழ் பவானி, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டப் பகுதிகளில் புதுக் கிணறுகள் தோண்டும் வேலை துவக்கப்பட்டுள்ளது.
27. சேலம் மாவட்டத்தில் திருமணிமுத்தாறு, பொன்னியாறு திட்ட வேலைகள் துவக்கப்பட்டுள்ளன.
28. திருநெல்வேலி மாவட்டத்தில் பாச்சையாறு பாசனத் திட்டம் துவங்கியுள்ளது.
29. மேலணைப் பகுதியில் காவிரியின் குறுக்கே ஓர் அணையைக் கட்டுவதற்கு ஆரம்ப வேலை நடைபெறுகிறது.
30. குமரி மாவட்டத்தில் சித்தார் – பட்டினக்கால் திட்டம் நிறைவெய்தி, வரும் ஆண்டில் 35,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கொடுக்கும்.
31. தென்னுற்காட்டிலுள்ள மணிமுத்தா ஆற்றுத் திட்டம் ரூ. 45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படுகின்றது; இதனுல், 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.
32. காவிரி கழிமுகப் பகுதியில் இருபோகச் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் கல்லணைக் கால்வாய், காவிரிக் கால்வாய் முதலியவற்றை மேநிலைப்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
33. வீராணம் ஏரித் திட்டத்திற்கு ரூ. 25 இலட்சம் செலவிடப்படுகின்றது.
34. தர்மபுரி மாவட்டத்தில் தொட்டிஅள்ளி கிராமத்தில் ரூ. 50 இலட்சம் செலவில் புதிய அணை ஒன்று கட்டப்படவிருக்கின்றது; இதனுல், 1,750 ஏக்கர் நிலம் பாசனம் பெறும்.

—தொகுத்தவர்: மு. இளங்கோ

'தீ'யவர்களின் ... துவதற்குத் திட்டம்

காவல் துறை அதிகா... கூட்டாக இணைந்து செயல்ப...

தீயிடுபவர்கள் நோக்கம் கண்டறியப்படும்

சென்னை, ஜுன் 27.— கடந்த சில நாட்களாகச் சென்னையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் தீ விபத்து குறித்துப் போலீசு அதிகாரிகள் விவாதித்தனர்.

"தமிழகத்திலுள்ள காவல் துறையைச் சார்ந்த அனைவரும் கூட்டாகச் சேர்ந்து

தலைவர்: வி. சாலமோன்; பேசுவோர்: மு. தமிழ்க் குடிமகன், என். இராசாங்கம் எம்.எல்.ஏ., எஸ். எஸ். நேசன், இரா. கரிகாலன், மற்றும் பலர்.

சென்னையில் நடைபெற்று வரும் தீ விபத்துக்கு யார் காரணமானவர்கள் என்பதைக் கண்டறியவேண்டும்"

என்று இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோது தமிழ்நாடு காவல் துறைத் தலைமை அதிகாரி திரு. ஆர். எம். மகாதேவன் குறிப்பிட்டார்.

குற்றம், சட்டம்—ஒழுங்கு, இரகசியக் காவல் துறை ஆகியவைகளைச் சார்ந்த அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

"1968-ம் ஆண்டில் மட்டும் இது வரையில் 100 தீ விபத்துக்கள்

...ா"

...றத் தலைமை ...ார்.

...காரிகள் குடி ...களில் ரோந்து சுற்றி இவ்விபத்துக்கள் ஏற்படுவதற்கு என்னென்ன காரணங்கள் என்பதை ஆராய்ந்து —இவ்விபத்துக்கள் ஏற்படக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும்"

என, தமிழ்நாடு போலீசுத் துறைத் துணைத் தலைமை அதிகாரியும், சென்னை மாநகர போலீசு கமிஷனரும், போலீசு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆளுநர் ஆறுதல்

தீ விபத்துக்களினல் பாதிக்கப்பட்டுள்ள சில இடங்களை, உதகமண்டலத்திலிருந்து சென்னை திரும்பியுள்ள தமிழக ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களும், சர்தாரிணியும் நேரில் போய்ப் பார்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்தாரிணி அவர்கள், உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

பாலர் அரங்...
ஜூன் 28, 29, 30-ந் தேதிக...
மாலை 4-மணிக்கு
'சர்க்கஸ் கடல் மீன்'
(எம்.ஜி.எம். படம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.